https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# எடுத்துரைப்பு நோக்கில் நீதிநெறி விளக்கம்

**மா. வெண்மணி**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
**முனைவர் சு. அரங்கநாதன்**
உதவிப் பேராசிரியர்/ நெறியாளர், தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சைதாப்பேட்டை, சென்னை-15

**சுருக்கம்**

*தமிழ் இலக்கியத்திற்கு பங்களிப்புச் செய்த பிற்காலப் புலவர்களில் குறிப்பிடத்தக்கவர் குமரகுருபரர் ஆவார். தமிழ்ச் சூழலில் 15, 16ஆம் நூறாண்டுகளில் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் சுணக்கம் ஏற்பட்டு, தமிழ்ப்புலவர்களை ஆதரிப்பார் யாருமின்றி இருந்த சூழலில் குமரகுருபரர் போன்றோர் தமிழ் இலக்கியத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளனர். அவ்வகையில் குமரகுருபரர் இயற்றியுள்ள நீதி நெறி விளக்கம் நூலினை எடுத்துரைப்பியல் நோக்கில் இக்கட்டுரை விளக்க முற்படுகின்றது.*

**முன்னுரை**

*புதிதாக வளர்ந்து வரும் கோட்பாடுகளில் ஒன்று எடுத்துரைப்பியல் கோட்பாடு ஆகும். மேலை நாடுகளில் உருவாக்கம் கண்ட கோட்பாடுகளின் பயன்பாடு இன்று ஆய்வுலகில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வாறு உருவாக்கப்பட்டுள்ள எடுத்துரைப்பியல் கோட்பாட்டின் படி பிற்கால நீதி இலக்கிய நூலான நீதிநெறி விளக்கப் பாடல்களை ஆராயும்போது புலவர்களின் கருத்து குறியீடு சொல்வளத்தின் உட்பொருளை வெளிக்கொணர்வதில் பெரும் பங்காற்றுகிறது. நீதி நெறி விளக்கத்தில் கல்வி குறித்த பாடல்கள் மட்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது. எடுத்துரைப்பியல் அல்லது விவரணையியல் என்பது புலவர் அல்லது படைப்பாளர் தம்கருத்தை எடுத்துச் சொல்வதற்குப் பயன்படுத்திய வழிமுறையாகும். பிற்கால தமிழ்ப் புலவரான குமரகுருபரின் நீதிநெறிக் கருத்துகள் கல்வி, நட்பு, ஈகை, அரசு செயல்வகை, அமைச்சர் நீதி, சொல்வன்மை, கூடா நட்பு போன்ற பல்வேறு பொருண்மையின் வழி அறக்கருத்துகளை எடுத்துரைக்கும் திறத்தைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது*

**குறிச்சொற்கள்**

*நீதி நெறி - எடுத்துரைப்பு - கல்வி - நீதி இலக்கியம் - குமரகுருபரர் - கற்றவர்*

**எடுத்துரைப்பியல் விளக்கம்**

*எடுத்துரைப்பியல் (Narratology) என்பது இலக்கியம் சார்ந்த அழகியல் கூறாகும். இலக்கியச் சுவையை மேலும் அதிகபடுத்துவதாக இம்முறை அமைகின்றது. ஒரு கருத்தை அல்லது நிகழ்வை ஒருவர் மற்றொருவர்க்குச் சொல்லும் வளர்ச்சி நிலையே எடுத்துரைப்பியலாகும். எடுத்துரைப்பு என்பது பனுவலை உருவாக்கும் செயல் அல்லது செயல்பாட்டு படிமுறை ஆகும். இது மெய்மையாகவும் அமையலாம், புனைவாகவும், அமையலாம் அல்லது இரண்டாகவும் அமையலாம். எடுத்துரைப்பின் அடிப்படை அலகுகளான நிகழ்ச்சிகள் மொழியை எடுத்துச் சொல்லும் செயல்பாடு ஆகியவை ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டு ஒரு படிநிலை மாற்றமாக உருப்பெற்று, பின் புனைவாக மாற்றம் பெறுவதை அறியமுடிகிறது.*

**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

### நீதிநெறியின் முக்கியம்

மனிதர்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தீர்க்க உதவும் வழிகாட்டுதலாக நீதிநெறி அமைந்துள்ளது. நீதிநெறி வழிகாட்டும் பாடல்கள் நம் பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்டே வடிவமைக்கப் பட்டுள்ளன. தமிழில் நீதிநெறியைக் கற்றுக் கொடுக்கும் முக்கியமான "திருக்குறள்," "ஆத்திச்சூடி," மற்றும் பிற பழம்பெருமை வாய்ந்த நூல்கள் இடம்பெற்றுள்ளன. ஆத்தி சூடியில் உள்ள ஒவ்வொரு குறுஞ்சொற் களும் நீதியையும் ஒழுக்கத்தையும் முன் வைக்கின்றன. நீதிநெறி விளக்கம் ஒவ்வொரு வருக்கும் வாழ்வின் உன்னதக் குறிக்கோளை உணர்த்தும் வகையில் நற்பண்புகளைக் கற்றுத் தருகிறது.

### பிற்கால நீதி இலக்கியங்கள்

தொல்காப்பியத்தில் காஞ்சித் திணையிலும், பாடாண் திணையிலும் கூறப்பட்டுள்ள பல துறைகள் நிதீகளாகவும், தத்துவங்களாகவும் கிளைவிட வகுத்தன. சங்க இலக்கியத்தில் பல பாடல்கள் சிறந்த அறிவுரைகள் இடம் பெற்றுள்ளன இவ்வேர்களிலிருந்து கிளைத்து வளர்ந்தது பிற்கால நீதி நூல்கள். தமிழில் நீதிநூல் வகைமை வளர்ச்சி எளிமையும் சிறப்பையும் உடையதாக விளங்குகிறது. தமிழர் கோட்பாடுகளுள் தலையாய கோட் பாடாகத் திகழ்வது அறம். அறம் என்ற சொல்லிற்கு கடமை, நோன்பு, தர்மம், கற்பு இல்லறம், துறவறம், நல்வினை உள்ளிட்ட பொருள்கள் உண்டு. ஒரு பிறப்பில் அறம் செய்தால் மறுபிறப்பில் பேரின்பத்தைப் பெற முடியும். வாழும் காலத்தில் நன்றாக இருப்பர் என்பதே கட்டுரையின் கருது கோளாகும்

### நீதிநெறி விளக்கம்

நீதிநெறி விளக்கம் குமரகுருபர சுவாமிகளால் எழுதப்பெற்ற மிகப் புகழ்பெற்ற அற இலக்கிய நூலாகும். இந்நூலில் 102 வெண்பா க்கள் இடம்பெற்றுள்ளன. இவர் வாழ்ந்த காலம் கி.பி.1575-1635 ஆகும். நூல் முழுவதும் வாழ்வில் ஏற்றுக் கடைப்பிடிக்க வேண்டிய நற்கருத்துகள், மக்களுக்கு ஏற்ற நீதி வழிகளை விளக்கி உரைப்பது நோக்கமாகும். நீதிநெறி என்பது மனிதர்கள் வாழ்வில் ஒழுங்கையும் அறத்தையும் ஏற்படுத்தும் அடிப்படையான விதிமுறைகளின் தொகுப்பாகும். தமிழில் பல இலக்கியங்களும் பாடல்களும் நீதிநெறியை சிந்தித்து வாழ்வில் கடைப்பிடிக்க வழிகாட்டு கின்றன. இவற்றில் சிலநூல்கள் உரைநடை யிலும் கவிதை வடிவிலும் காணப் படுகின்றன.

### எடுத்துரைப்பு வழியில் நீதிநெறி விளக்கம்

மேலை நாடுகளில் தோன்றி இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில், தமிழ்கூறும் நல்உலகிற்குத் தமிழ் சான்றோரால் அறிமுகம் செய்யப்பட்டது எடுத்துரைப்பியல் என்னும் கோட்பாடு ஆகும்.இக்கோட்பாட்டினைக் கொண்டு ஆராயப்பெறாத தமிழ் நூல்கள் நிரம்ப உள்ளன. படைப்பாளிக்கும் படைப்பி ற்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர் பினை எடுத்துரைப்பியல் எடுத்துரைக்கிறது.

எடுத்துரைப்பியல் கோட்பாடு பனுவல் என்கிற உரைக்கும் படைப்பிற்கும் இடையே உள்ள தொடர்பினை விளக்குவதாகும். நேர்மறையான எடுத்துரைப்பியல், எதிர்மறை யான எடுத்துரைப்பியில் என்ற கோட்பாட் டின் பகுப்பானது இலக்கியங்களிலுள்ள நேர்மறை மற்றும் எதிர்மறைச் சிந்தனைகள் சமுதாயத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதைப் பற்றியும் விளக்குகிறது.குமரகுருபரர் ஒரு குறிப்பிட்ட கருத்தை எடுத்துக்காட்டும் போது அதை எளிமையாகவும் புரிதலாகவும் சொல்லிருக் கிறார். இதனால் அவர் பாடல்கள் அனைவருக்கும் ஏற்றதாக அமைகின்றன. அவரது பாடல்களில் சமூக நீதியும் ஒழுக்க நெறியும் தென்படுகின்றது.

### நீதிநெறி விளக்க பாடல்களின் காலம் கட்டமைப்பு

கருத்து, கொள்கை என்பனவற்றின் அடிப்படையில் கோட்பாடு கட்டமைக்கப் படுகிறது. இந்தக் கட்டமைப்பில் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலச் சிந்தனைகள் போன்றவை ஒரு படைப்பில் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பதையும், ஒரு மனிதனின் வாழ்வியலோடு எவ்வாறு தொடர்புடையது, ஒரு மனிதனைப் பண்படுத்தும் கருவியாக ஒரு படைப்பு எம்முறையில் செயல்படுகிறது என்பதைப் பற்றி எல்லாம் விளங்கவும், விளக்கவும் முடிகிறது. இவ்வாறு ஒரு படைப்பாளி தன் படைப்பில் கதாபாத்திரங்கள் மற்றும் உவமை, உருவகம், கற்பனை, எதுகை, மோனை உள்ளிட்ட கவிநயத்தோடு ஒரு படைப்பை உருவாக்குதல் போன்றவை அந்த படைப்பாளியின் கவித்துவத் தன்மையை எடுத்துரைப்பியல் கோட்பாட்டு வழி விளக்கப்படுகின்றன. இக்கட்டுரையில் காலம் கருத்து, கொள்கைகள் போன்றவை அளவு கோலாகப் பயன்படுத்தப்பட்டது

ஒரு தனிமனிதன் அல்லது குழு தனக்கென்று வரையறுத்துக் கொள்கின்ற அறம் சார் விதிமுறைகளே கொள்கை என்ற சொல்லாட லுக்குள் அடங்கும். ஒரு படைப்பாளன் தன் படைப்பில் கதை மாந்தர்கள் மற்றும் கதைப்பின்னலில் தனக்கான கொள்கையை விளக்குதல் எடுத்துரைப்பியல் கோட்பாட் டின் அங்கமாகும்.

**நீதிநெறி பாடல்களின் கல்வி**

**கல்வி விளக்கம்**

கல்வி மனித மனத்தை மேம்படுத்துவது ஒழுக்கமான வாழ்க்கை வாழக் கற்றுத் தருவது. மனிதன் மனிதனாக வாழ வழி காட்டுவததாகும். 'அறிவை அற்றம் காக்கும் கருவி' என்பார் வள்ளுவர்.அந்த அறிவு பக்குவப்பட்டு ஒளிர்வது கல்வி அறிவால் தான். கல்வி கற்கும் வாய்ப்பு சில நாட்கள்தான் வாழ்க்கையில் கிடைக்கிறது. இதனை நாலடியார் 'கல்வி கரையில கற்பவர் நாள் சிலர்' எனக் கூறுகிறது.கல்வி நல்லவற்றை சிந்திக்கக் கற்றுக் கொடுக்கிறது. அதனால் அறம், பொருள், இன்பம் வீடுபேறு கிடைக்கிறது என்று கூறுகிறார் குமரகுருபரர்

**கல்விக்கு நிகரில்லை**

**"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்;**
**புறங்கடை நல்இசையும் நாட்டும்—**
**உறுங்கவலொன்று**
**உற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியின்**
**ஊங்கில்லை.**
**சிற்றுயிர்க் குற்ற துணை"** – நீதிநெறிவிளக்கம்.1

கல்வி ஒன்றே அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் தரும். மற்றோரிடம் நல்ல பெருமையை நிலை நிறுத்தும்.வாழ்க்கையில் துன்பம் வருமிடத்து அவற்றை நீக்கக் கைகொடுக்கும். எனவே சிற்றுயிராகிய மனிதர்க்கு மிக நெருக்கமான துணை கல்வி ஒன்றே அதற்கு நிகரானது எதுவும் இல்லை

**கல்வி இன்பமா துன்பமா**

**"தொடங்குங்கால் துன்பமாய் இன்பம்**
**பயக்கும்**
**மடங்கொன் றறிவகற்றுங் கல்வி"–**
**நீதிநெறிவிளக்கம்.2**

கல்வி கற்கத் தொடங்கும் காலமானது விளையாட்டுப் பருவம் என்பதால் துன்பமாக இருக்கும். ஆனால் பிற்காலத்தில் இன்பத்தை விளைக்கும். அறியாமையைக் கொன்றுவிடும் அறிவைப் பெருக்கும். ஆனால், மிக்க ஈர்ப்பைத் தரும். மேனி முழுவதும் அணி கலன்களை அணிந்திருக்கும் பெண்ணே, இதனைத் தெரிந்து கொள் என்று கூறி பெண்கல்வியை எடுத்துரைக்கிறார்.

**நல்ல கல்வி**

**"கல்வியே கற்புடைப் பெண்டிரப்**
**பெண்டிர்க்குச்**
**செல்வப் புதல்வனே தீங்கவியாச்**
**சொல்வளம்** – நீதிநெறிவிளக்கம்.3

ஒருவர் தாம் கற்றறிந்த கல்வியே கற்புடைய மனைவிக்கு நிகர். அம்மனைவிக்கும் பிறந்த நற்குழந்தைப் பேறே கல்வியால் ஒருவர் படைத்த பாடல்கள் கற்றறிவால் பெற்ற சொல்லாற்றலே வளப்பம் தரும் என்று தெளிவுப்படுத்துகிறார்.

**பொன்மலர் நாற்றம் உடைத்து**

**"எத்துணைய ஆயினும் கல்வி இடமறிந்து**
**உய்த்துணர்வு இல்எனின் இல்லாகும்" -**
நீதிநெறிவிளக்கம்.4

ஒருவருக்கு வெறும் நூலறிவு இருந்தால் மட்டும் போதாது.நுண்ணறிவும் வேண்டும். அதனை சிறப்பாக எடுத்துரைக்கும் சொல்லறிவும் வேண்டும்.

ஆழப்படிப்பும் இடைவிடாப்படிப்பும்

**"வருத்தித் தாம் கற்றன ஓம்பாது, மற்றும்**
**பரிந்து சில கற்பான் தொடங்கல் கருந்தனம்"**
**-** நீதிநெறிவிளக்கம்-8

கற்ற அரிய நூல்களை மீண்டும் மீண்டும் கற்காமல் புதிய நூல்களைக் கற்றல் சிறப்பாகாது.நூல்களை நுனிப்புல் மேய்வது போலப் புரட்டிப் புறக்கணித்தல் தகாது.தாம் கற்ற நூல்களை மூன்று காலங்களிலும் கற்க வேண்டும் என்று கூறுவதை அறியமுடிகிறது. இதையே வள்ளுவரும் கற்க வேண்டிய வற்றைக் குற்றமறக் கற்று அவற்றின் படி நடக்கவேண்டும் என்கிறார்.

**கல்வியுடன் செல்வமும் சேர்தல்**

**"எனைத் துணைய வேனும் இலம்பாட்டார்**
**கல்வி**
**தினைத் துணையும் சீப்பாடு இலவாம்—**
**மனைத்தக்காள்**
**மாண்பு இலள் ஆயின், மணமகன் நல் அறம்**
**பூண்ட புலப்படாப் போல்" -**
நீதிநெறிவிளக்கம். 9

உயர்ந்த கல்வியைப் பெற்ற கணவன் எத்துணை நல்லவன் ஆயினும் அவனுக்கு வாய்த்த மனைவி பண்பு இல்லாதவளாக இருந்துவிடின் அவர்களின் குடும்ப வாழ்க்கையில் சிறப்பு ஏற்படுவதில்லை. இதனை வள்ளுவரும்

**உடன்பாடு இலாதவர் வாழ்க்கை**
**குடங்கருள்**
**பாம்போடு உடன் உறைந்தற்று** (குறள்-890)
என்று கூறுகிறார்.

கருமியைத் தொழாதே கடுந்தவசியைத் தொழு

"இவறன்மை கண்டும், உடையாரை யாரும்
குறையிரந்தும் குற்றேவல் செய்ப" –

நீதிநெறிவிளக்கம். 11

ஒருவன் கருமி என்று அறிந்த பிறகும், உலகோர், பணக்காரரைக் கெஞ்சித் துன்பங்களைச் சொல்லி யாசிப்பர். அன்னோர் ஏவும் சிறு சிறு வேலைகளையும் செய்து கைகட்டி நிற்பர். இவ்வாறு இல்லாமல் அருந்தவம் செய்யும் பெரியார் பின் செல்லவேண்டும்.

## அறிவே அழகினும் அழகு

"கற்றார்க்குக் கல்வி நலனே கலன் அல்லால்,

மற்று ஓர் அணிகலம் வேண்டாவாம் முற்று"-

நீதிநெறிவிளக்கம். 12

என்ற பாடலில் சிறந்த நூல்களைக் கற்ற மேதைகளுக்கு அவர் கற்ற கல்வியே சிறந்த ஆபரணமாகும் வேறு ஆபரணம் எதுவும் வேண்டாம். முழுதும் இரத்தினக் கற்களால் அலங்கரிக்கப்பட்ட ஓர் ஆபரணத்திற்கு மேலும் ஓர் ஆபரணம் வேண்டுமா? வேண்டாம். அழகுக்கு அழகு செய்வார் யார் எனும் உவமையைப் பயன்படுத்தியுள்ளார்.

## எல்லாம் கற்றவர் எவரும் இல்லை

"முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க சிற்றுளியால்-

நீதிநெறிவிளக்கம். 13

உலகில் அனைத்தையும் கற்றறிந்தவர் யாருமில்லை. முற்றும் கற்றுவிட்டோம் என்று ஆணவம் கொள்ளக்கூடாது. கல்வியறிவு பெற்றவர்கள் ஆராய்ச்சித்திறன் மிக்கவர்களாக ஆய்வு மனம் கொண்டவர்களாக இருக்க வேண்டுமென வற்புறுத்துகிறார். "சிற்றுயிர், சிற்றுளி" போன்ற தொடர்கள் குமரகுருபரரின் தனித்தன்மையைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

## கற்றாரை நோக்கிக் கருத்தழிக

"தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—

நீதிநெறிவிளக்கம்.14

தம்மிடம் இருக்கும் பணம், பொன் பொருள்களை விட மிகுதியாக வைத்துள்ள மற்றவரை ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. உன்னைவிடக் குறைவாகப் பெற்றிருக்கும் ஏழையைப் பார்த்து, அம்மா என்னிடம் இருப்பவை மிகுதி என்று உள்ளம் நிறைவு செய்து கொள்ளுதல் சிறப்பு. அதுபோல் உன்னைவிட நிறையப் படித்தவரை ஒப்பிட்டுப் பார்த்து நம்மை மேம்படுத்திக் கொள்ளலாம்.

## எல்லார்க்கும் நன்றாம் பணிதல்

"கல்வி உடைமை, பொருள் உடைமை, என்று இரண்டு
செல்வமும் செல்வம் எனப்படும்"

நீதிநெறிவிளக்கம். 15

கல்வியும் பொருளும் மனிதனுக்கு ஒப்பற்ற செல்வங்களாகும். இவை இல்லாதவர்கள் சிறுமை அடைய நேரிடும்.எனவே மனிதன் வாழ்வில் கல்வியும் பொருளும் பெரும் செல்வமாகக் கருதப்பட வேண்டும் என்பதையும், அவற்றின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறுகிறார்.

## படித்தபடி நட

கற்று பிறர்க்கு உரைத்துத் தாம்நில்லார் வாய்ப்படூஉம்
வெற்றுரைக்கு உண்டு ஓர்வலிஉடைமை

நீதிநெறிவிளக்கம். 20

நிறைய அற இலக்கியங்களைக் கற்று அவற்றை மற்றவர்க்குப் பாடமாகச் சொல்லித் தாமும் வாழ்க்கையில் பின்பற்றாமல் இருப்போரின் வெற்றுரைக்கு மற்றவர்களைப் பாதிக்கும் வலிமை எதுவும் இல்லை. அக்கால ஆசிரியரை நோக்கி அளித்த அறிவுரைபோல் உள்ளது, ஆனால் இவை இக்கால ஆசிரியர்க்கும் முற்றும் பொருந்துமாறு குறிப்பிட்டுள்ளார்.

## கல்வி வணிகர்கள்

பிறர்க்குப் பயன் படத் தாம் கற்ற விற்பார்.

தமக்குப் பயன் வேறு உடையார்

நீதிநெறிவிளக்கம் 21

ஒருவர் தான் கற்ற கல்வியின் அறிவைப் பிறரின் நலனுக்காகப் பயன்படுத்தினாலே அவர் உயர்ந்தவர், செம்மையுடையவர் என்று குறிப்பிடுகிறார்.

## கற்பார் பொருள் காணார்

காக பணம் காணில் உனை விற்பார்
அவர்பால் தீ மேலாதே! என்பது

தமிழ்விடுதூது (184)

பணம் பெற்றுக் கொண்டு பாடம் சொல்லித் தருவது மிகவும் குற்றம் என்கிறார் குமரகுருபரர்.அன்றைய காலக்கட்டத்தில் கல்வி வணிகமயமாதல் இருந்துள்ளதை எதிர்த்துள்ளார்.

## கற்றோர் வாய்க் கேட்போர்

"போக்கு அறுகல்வி புலம் மிக்கார்பால் அன்றி

மீக்கொள் நகையினார்வாய்ச் சேரா"—
நீதிநெறிவிளக்கம்.23

குற்றமிலாத கல்வி, அறிவு நலன் வாய்ந்த சிறந்தவரிடத்தே இருக்கும். கருத்தை முன்னிறுத்தாமல் நகப்பை முன்னிறுத்துபவர் கல்வியைக் குமரகுருபரர் கடுமையாகச் சாடியுள்ளார். அத்தகையோரை மோகினிப் பிசாசு என்கிறார்.

## கருத்து

ஒரு கொள்கையை வலுப்படுத்தக்கூடிய செயல்கள் மற்றும் சிந்தனைத் துளிகள் கருத்து என்றே கூறலாம். இது நடைமுறை வாழ்க்கையில் நாம் அனைவரும் பயன்படுத்தக்கூடிய ஒன்றாகவே இருக்கிறது.

குமரகுருபரரின் பாடல்களில் உள்ள நீதிநெறிக் கருத்துகள் நேரடியாகவோ, உருவகமாகவோ வெளிப்படுகின்றது. உதாரணமாக, அவர் மனிதர்கள் ஏன் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை நுட்பமாக எடுத்துரைக்கின்றார்.

கல்வி உயிர்களுக்கு உறுதுணை. அது கற்கத் தொடங்கும்போது துன்பம் தரினும் பிற்காலத்து இன்பம் நல்கும். சிறந்த கல்வி அறிவைப் பெறுதல் சிறந்த கற்புடைய பெண்டிரை அடைவதற்கு நிகர் கற்றவருக்குச் சொல்லும் திறன் இருப்பின் பொன்மலர் நறுமணம் எய்தியது போலாகும். நூல்களை ஆழப் பயிலுதலே சிறப்பு. கல்வியுடன் செல்வமும் சேர்தல் வேண்டும். நல்லோர் பின் செல்லலே கற்றவர்க்கு அழகு. ஒருவர்க்குக் கற்ற கல்வியே அழகு. முற்றும் கற்றவர் எவருமில்லை. நம்மை விடக் கற்றாரை நோக்கி நாம் கற்றது எம்மாத்திரம் என்று தன்னடக்கம் கொள்ளவேண்டும் ஏழைகளைப் பார்த்துத் தம் உடைமையை ஒப்பிட்டு நிறைவு கொள்ளவேண்டும். செல்வங்களுள் முதலாவது கல்விச் செல்வம், அடுத்தது பொருட்செல்வம். கற்றபடி நடந்து காட்டாத ஆசிரியரின் கற்பித்தலுக்கு ஆற்றல் இல்லை. தாம் கற்ற கல்வியைச் சீடருக்குச் சொல்லித் தரும் போது அதற்காகச் சீடரிடமிருந்து கூலி எதுவும் வாங்குதல் கூடாது. குற்றமில்லாத கற்பித்தல் நல்லோரிடமே இருக்கும். மேலோர் சிறந்த குருவிடம் சென்று யோகம் பயிலுவர். கீழோர் சிறப்பில்லாதவரிடம் சென்று போகம் பயிலுவர் இதை ஒவ்வொரு தனி மனிதனும் தன் வாழ்வில் கடைப்பிடித்தல் அவசியமான ஒன்றாகும் அங்ஙனம் கைகொண்டால் யாவருக்கும் ஒளி தரக்கூடிய கலங்கரை விளக்கமாக இருக்க முடியும் என்பதில் ஐயமில்லை

## முடிவுரை

மேலை நாடுகளில் தோன்றி தமிழ்நாட்டில் உருப்பெற்று தமிழ்ச் சான்றோர்களால் உயிர்பெற்று தமிழியல் புலங்களில் வலம் வந்து கொண்டு இருக்கின்ற எடுத்துரைப் பியல் கோட்பாடு நீதிநெறி விளக்கத்தில் கல்வியோடு ஒப்பிடப்பட்டுள்ளது. அறம் ஒரு மனிதனை செயல்படுத்தக்கூடிய தலையாய பணியாகும். நீதிநெறிப் பாடல்களுக்குள் பொதிந்து இருக்கும் கல்வியானது சமுதாய த்தில் ஒருவரின் பண்பாடுகள், செயல்கள் வழியாக வெளிப்படுகின்றன. எடுத்துரைப்பு களின் அடிப்படையில் கல்விச் சார்ந்த பாடல்கள் நேர்மையையும், ஒழுக்கத் தையும் வலியுறுத்துவதைக் காட்டுகிறது. கல்வியானது சமூகத்தில் நல்லொழுக்கம் வளர்க்கும் திறனைக் கொண்டதுள்ளதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## பயன்பட்ட நூல்கள்

1. கதிர்முருகு, பிற்கால நீதி இலக்கிய வரலாறு, நாம் தமிழர் பதிப்பகம், சென்னை-05, முதற்பதிப்பு: 2010
2. சிவா கி, பத்துப்பாட்டின் எடுத்துரைப் பியல், இலட்சுமி பதிப்பகம், சுந்தரம் பிள்ளை, திருப்பத்தூர்-635 654, முதற்பதிப்பு: 2020
3. அறவாணன் க.ப., அறஇலக்கியக் களஞ்சியம், தமிழ்க் கோட்டம், அமைந்த கரை, சென்னை-29, இரண்டாம் பதிப்பு:2011
4. சிவா கி, எடுத்துரைப்பியல் நோக்கில் கையறுநிலைப் பாடல்கள், இலட்சுமி பதிப்பகம், சுந்தரம்பிள்ளை, திருப்பத்தூர்- 635 654, முதற்பதிப்பு: 2020
5. எஸ்.கௌமாரீஸ்வரி, பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள்-சாரதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்ககம், 3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை- 600014, முதல் பதிப்பு: ஆகஸ்ட், 2012.
6. திருநாவுக்கரசு க.த., திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, மறுபதிப்பு -2011
7. பொதிகைத் தமிழரசன்,சமூகவியல் நோக்கில் நீதி இலக்கியம் - பொன்மணி பதிப்பகம், தலையாரிபட்டி, இணங்கனூர், அரவக்குறிச்சி, கரூர்-639205, மறுபதிப்பு: ஆகஸ்ட், 2008
8. ஆ.வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் - குமரன் புத்தக இல்லம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி, சென்னை- 26, மீள் அச்சு: 2016.
9. நீதி நூல்கள், அருள்வளர்சிவம் அறக்கட்டளை, நெய்தல் கதூமியகம், புதுவை, முதல் பதிப்பு : 2014.
10. பஞ்சாங்கம் க., இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், அன்னம், மனை எண்1, நிர்மலா நகர், தஞ்சாவூர்-17, இரண்டாம் பதிப்பு:2016